பக்கங்கள்:-17

காலை முரசு

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

## சபையில் அநுர அரசுக்கு கஜேந்திரகுமார் அழுத்தம்




"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மிக மோசமான சட்டமாக இந்த 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 28 | சனிக்கிழமை | 10.05.2025 | அதிர்வு 279




# தனித்துவமான இனத்தின் விடுதலை இயக்கமே தமிழரசு

## பிமல் தனது கருத்தை உடன் வாபஸ் பெற வேண்டும் என்று நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி வலியுறுத்து

"தனித்துவமான இனத்தினுடைய விடுதலை இயக்கமே இலங்கை தமிழரசுக்கட்சி.இந்தக்கட்சிமக்களுக்குக்கசிப்பையும் பணத்தையும் வழங்கியே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ள கருத்து முறையற்றது. நிராகரிக்கத்தக்கது. இந்தக் கருத்தை அவர் உடனடியாக வாபஸ் பெற வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார். 06




நாட்டை ஆட்சி செய்த தரப்புக்கள், நாட்டின் வளங்களையும் நிதி மூலங்களையும் மோசமாகச் சூறையாடியதன் விளைவே நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

2022 இல் நாடு மீள முடியாத பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்த போது, அதிலிருந்து நாட்டை விடுவிக்கும் நோக்கத்திற்காகப் பதவிக்கு அழைக்கப்பட்டவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று பொதுவாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அவரது சுமார் இரண்டரை வருட ஆட்சியில், அவரைச் சூழவிருந்தவர்களினால் எவ்வளவு தூரம் அரசின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன என்பதைத் தனது நடவடிக்கை மூலம் தற்போதைய அரசு மக்களுக்குக் காட்ட முனைகிறது.

ஜனாதிபதியாக ரணில் இருந்த போது அவரைச் சூழவிருந்தவர்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் என்ற பெயரில் ஒரு பெரிய வாகனப் பட்டாளத்தை ஏலத்துக்கு விடும் 06



# உடவளவை கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரே கொட்டாவையில் வியாழக்கிழமை இரவு சுட்டுப் படுகொலை

கொழும்பு – கொட்டாவை, மலபல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொட்டாவை, மலபல்ல பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சம்பவ இடத்தில் இருந்து தோட்டாக்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் மொனராகலை – உடவளவை பிரதேசத்தில் நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரிகள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ஜனாதிபதி செயலகத்தின் அதி சொகுசு வாகன ஏல விற்பனையின் இரண்டாம் கட்டம் ஆரம்பம்

ஜனாதிபதி செயலகத்திற்குரிய 27 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களின் இரண்டாம் கட்ட விற்பனைக்காக, விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

1991 முதல் 2016 வரை பல்வேறு ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட வாகனங்களே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன.

| | |
|---|---|
| BMW வாகனங்கள் | – 2 |
| போர்ட் எவரெஸ்ட் ஜீப் | – 2 |
| ஹுண்டாய் டெரகன் ஜீப் | – 1 |
| லேண்ட் ரோவர் ஜீப் | – 2 |
| மிட்சுபிஷி மொன்டெரோ | – 1 |
| நிசான் பெற்றோல் வகை வண்டிகள் | – 3 |
| நிசான் கார்கள் | – 2 |
| போர்ஷே கெய்ன் கார் | – 1 |
| சாங்யோங் ரெக்ஸ்டன் ஜீப் | – 5 |
| லேண்ட் குரூசர் சஹாரா ரக ஜீப் | – 1 |
| வீ8 ஜீப் | – 6 |

மிட்சுபிஷி ரோசா குளிரூட்டப்பட்ட பஸ் – 1 ஆகியன இதில் அடங்குகின்றன.

இது தொடர்பான விலை மனு விண்ணப்ப பத்திரங்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை ஜனாதிபதி செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 14 ஆம் திகதி வரை, இலக்கம் 93, ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுசல நிறுவன வளாகத்தில் இந்த வாகனங்களை பரீட்சிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இளம் குடும்பஸ்தரின் சடலம் ஒப்படைப்பு



(எஸ்.ரகுதீஸ்)

போதைவஸ்து பாவித்ததன் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவர் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

இந்த மரணம் தொடர்பில் இன்று சனிக்கிழமை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணை மேற்கொள்ளவுள்ளார்.



# டேன் பிரியசாத் கொலை விவகாரம் இரு சந்தேகநபர்கள் அடையாளம்

சமூக செயற்பாட்டாளர் டேன் பிரிய சாத் கொல்லப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 2 சந்தேகநபர்களும் சாட்சியாளர்களால் நேற்று அடையா ளங்காட்டப்பட்டனர்.

இதற்கான அடையாள அணிவகுப்பு கொழும்பு பிரதான நீதவான் ஹர்சன கெகுனுவெலவின் உத்தரவுக்கமைய நேற்று இடம்பெற்றது.

இதன்போது, இந்த மூன்று சாட்சியாளர் களும் இரண்டு சந்தேகநபர்களையும் அடையாளம் கண்டு நீதிமன்றுக்கு அறி வித்தனர்.

இந்தநிலையில், சந்தேகநபர்கள் சார் பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத் தரணி, கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கும் மேற்படி கொலைக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை எனத் தெரிவித்து ஆதாரங்களை சமர்ப்பித்தி ருந்தார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திய சந்தேக நபர்கள் தலைமறைவாக இருக்கின்ற னர் என அவர் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான செலவின அறிக்கையை சமர்ப்பிக்க காலக்கெடு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான செலவின அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதி நள்ளிரவுக்குள் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான தனித்தனி அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வேட்பாளர்கள் தாம் போட்டியிட்ட மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளுக்குக் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியும். எனினும், இவ்வாறு செலவு அறிக்கையைச்சமர்ப்பிக்காதவேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்எனத்தேர்தல்கள்ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

# இவ்வருடம் இதுவரை 29 பேர் சுட்டுக்கொலை

## 23 பேர் காயம்



2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து மே மாதம் 8 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாடளாவிய ரீதியில் 43 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 43 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 29 பேர் உயிரிழந்துள்ளதுடன் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 94 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
UNIVERSITY GRANTS COMMISSION

# பல்கலைகளுக்கு ஒன்லைன் ஊடாக பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஒன்லைன் ஊடாக பல்கலைக்கழகங்களுக்கு பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

WWW.UGC.AC.LK எனும் இணையத்தள முகவரியின் ஊடாக இதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை பல்கலைக்கழக அனுமதிக்காக பதிவு செய்ய முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்பின்னர் பதிவு நடைமுறையின் போது தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக விருப்ப ஒழுங்கை மாற்றியமைப்பதற்காக மாத்திரம் இரண்டு வார அவகாசம் வழங்கப்படவுள்ளது.

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்அடிப்படையில்இம்முறைபல்கலைக்கழகங்களுக்கு 43,300 மாணவர்களை இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# கொட்டாஞ்சேனை சிறுமி மரணம்: ஆசிரியருக்குக் கட்டாய விடுமுறை




கொட்டாஞ்சேனை சிறுமியின் மரணத்துடன் தொடர்புடைய ஆசிரியர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியரைக் கட்டாய விடுமுறையில் அனுப்பியுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பொலிஸாரால் வழங்கப்பட்ட “பி” அறிக்கையின் பிரகாரம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பான உள்ளக விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி குறிப்பிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையை இந்த அரசு முன்னெடுத்திருக்கின்றது.

ஏற்கனவே முதற்கட்டமாக 14 சொகுசு வாகனங்கள் உட்பட இருபது வாகனங்கள் மற்றும் பெருமளவு வாகன உதிரிப் பாகங்கள் ஏலத்துக்கு விடப்பட்டன. அடுத்து மேலும் ஒன்பது டிஃபெண்டர் ஜீப்புகள் உட்பட 15 வாகனங்கள் ஏலத்துக்குப் போயின.

அடுத்த கட்டமாக இப்போது 27 சொகுசு வாகனங்கள் ஏலத்துக்கு செல்கின்றன என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மக்களிடமிருந்து இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர ஊழியர்கள் பயன்படுத்த ஒதுக்கப்பட்டவை அல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் அரசமைப்பின் கீழ் அவருக்காக நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் அது போன்ற பிற பிரமுகர்களுக்கு எனப் பயன்படுத்த ஒதுக்கப்பட்ட வாகனங்களே இவ்வளவும். இத்தனை சொகுசு வாகனங்களும் இவ்வாறு பல கோடி ரூபா பெறுமதிக்கு விற்கப்படுகின்றன.

ஆலோசகர்கள் என்ற பெயரில் பலடசின் கணக்கானோரை நியமித்து, அவர்களுக்கான வசதிகள் என்ற பெயரில் நாட்டின் வளத்தை கொள்ளையிட்டுள்ளனர் என்று ஆளும் தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர்.

\+ + +

உள்ளூராட்சி சபை தேர்தல்களில் எதிர்பார்க்கப்பட்டபடி பெரும்பாலானவற்றில் எந்தக் கட்சியும் தனித்து அறுதிப் பெரும்பான்மையை ஈட்டவில்லை. அதனால் அந்தச் சபைகளில் எல்லாம் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்திகளாக சிறிய கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்கள் உருவெடுத்து இருக்கின்றன.

பொது ஜன முன்னணியின் பிரமுகரான முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கா தமது கட்சி உள்ளூராட்சி சபைகளில் பிரதான எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு முழுமையாக ஒத்துழைத்து உதவும் என்று அறிவித்திருக்கிறார்.

இன்றைய நிலையில் எதிர்த் தரப்புகள் ஒன்றிணைந்து குறைந்தது நூற்றி எழுபது உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தைக் கைப்பற்ற முடியும் என்று அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தவிரவும், தமிழ் பிரதேசங்களில் சுமார் 50 சபைகள் வரை தமிழ் கட்சிகள் வசம் வீழும் நிலை உள்ளது.

அப்படிப் பார்த்தால் எஞ்சிய 100 முதல் 110 வரையான சபைகளிலேயே ஆளும் தரப்பினால் அதிகாரத்தை நிலைநிறுத்த முடியும் என்று தெரிகிறது. அந்த வகையில் பார்த்தால் நடந்து முடிந்த தேர்தல் ஆளும் தரப்புக்கு பெரும் பின்னடைவுதான்...!

\+ + +

'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' என்பார்கள். அந்த நிலைதான் போலும் மன்னாருக்கு.

ஏற்கனவே கனிய மணல் அகழ்வு, கரையோர மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்திக் கட்டமைப்பு என்று சர்ச்சைக்குரிய விடயங்களை எதிர்கொண்டு அவற்றைத் தடுப்பதற்கு வழி தெரியாமல் தடுமாறி நிற்கிறது மன்னார்ப் பிரதேசம்.

இந்தப் பின்புலத்தில் இப்போது, மன்னார் கடல் படுக்கையில் உள்ள நான்கு கடல் பகுதிகளில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வுக்கான சாத்தியமான முயற்சிகளை முன்னெடுக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கின்றது.

அடையாளம் காணப்பட்ட கடல் படுக்கைத் தொகுதிகளை ஆராய்ந்து, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதித்திறன் கொண்ட முதலீட்டாளர்களை ஈர்ப்பது இப்போதைய திட்டம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கூறியிருக்கிறார்.

மன்னாரை அண்டிய கடல் படுக்கையில் இத்தகைய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எதிராக மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் வெடிக்குமோ என்னவோ தெரியவில்லை.

## அரசியல் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் தற்போதும் அந்தச் சட்டத்தை அமுல்படுத்துகின்றது. இது நியாயமற்றது. பல ஆண்டு காலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டின் பிரதான சட்டமாகவுள்ள அரசமைப்பின் முக்கிய அம்சங்களை அமுல்படுத்துமாறு சுமார் 38 ஆண்டு காலமாகத் தேசிய மற்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில்தான் இந்த நாடு உள்ளது.

இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வந்து அரசின் படுமோசமான செயற்பாடுகளைத்தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை கடந்த அரசுகள் செயற்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டி, கடும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணை வழங்கினார்கள்.

கடந்த கால ஆய்வு அறிக்கைகளைக் கருத்தில்கொண்டு தேசிய மக்கள் சக்தி மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றும் நடைமுறையில்தான் உள்ளது. 12 அல்லது 13 தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் சிறையில் உள்ளார்கள். இந்தச் சட்டத்தின் பிரகாரம் தவறாகக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அரசு தயாரில்லை.

எஸ்.கிருபாகரன் எனும் அரசியல் கைதி தொடர்பில் இந்த நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் நிராகரிக்கப்பட்டு, அந்த வாக்குமூலம் பலமான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டு அந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் அந்த நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு எஸ்.கிருபாகரன் இன்றும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நியாயமற்ற வகையில் அம்பாந்தோட்டை பகுதிக்கு அவர் கொண்டுச் செல்லப்பட்டுள்ளார். சிறையில் வாடுகிறார்.

அதேபோல் ஆனந்தவர்மன் என்றழைக்கப்படும் அரவிந்தன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்." – என்றார்.

## தனித்துவமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கானசிறப்புரிமைகளைக்குறைத்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கசிப்பு மற்றும் பணத்தை மக்களுக்கு வழங்கியே வென்றுள்ளது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க முறையற்ற வகையில் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்தக் கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர் அந்தக் கருத்தை உடனடியாக மீளப் பெற வேண்டும்.

உண்மையான நியாயமான ஜனநாயகவாதியாக அவர் இருந்தால் – அவர் அரசியல் ரீதியாகக் காழ்ப்புணர்ச்சியற்ற இனவாதமற்ற அரசியலை இந்த நாட்டில் செய்ய விரும்புகின்றார் என்றால் – இனங்களை மதிக்கின்றார் என்றால் தன்னுடைய அந்தக் கருத்தை அவர் வாபஸ் பெற வேண்டும்.

1940ஆம் ஆண்டில் தமிழரின் தேசியத் தந்தை செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்டு 27 வருடங்களாகக் கிடப்பில் இருந்த இலங்கை தமிழரசுக் கட்சி 2004 ஆம் ஆண்டில் தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனால் வெளியில் கொண்டுவரப்பட்டு தமிழரின் தேசிய அடையாளமாகத் தரப்பட்ட கட்சி.

ஒருகாலமும் தமிழரசுக் கட்சி எவருக்கும் மதுவைக் கொடுப்பதையோ, மதுவுக்கான அனுமதிகளைப் பெறுவதற்கோ அல்லது மதுபானசாலைகளைத் திறப்பதற்கோ சம்மதம் தெரிவித்த கட்சியும் அல்ல. அதற்காக உடந்தையாக இருந்த கட்சியும் அல்ல. அதேபோன்று நாங்கள் பணம் கொடுத்து வாக்குப் பெற்றவர்களும் அல்லர்.

ஒரு தேசிய இனத்தினுடைய அடையாளத்தை – அவர்களின் இருப்பை – அவர்கள் இந்த மண்ணிலே வாழ வேண்டியதற்கான வாழ்க்கை முறையை – இழந்த இறைமையை மீட்பதற்காகப் போராடுகின்ற, தனித்துவமான இனத்தினுடைய விடுதலை இயக்கமே இலங்கை தமிழரசுக் கட்சி. எனவே, எங்களுடைய கட்சி சார்பாகப் மிகவும் பொறுப்புடன், எங்களுடைய கட்சி அவ்வாறாகக் கசிப்போ, பணமோ வழங்குகின்ற கட்சி அல்ல என்பதனை மீண்டும் பதிவு செய்கின்றேன்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் ‘அளப்பு’?

நாட்டில் கடந்த ஏழு மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸநாயக்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் - கடந்த ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை - நடந்த துப்பாக்கிச் சூடுகளில் 52 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அமைச்சர் கூறினார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் திட்டமிட்டுக் குற்றங்களை முன்னெடுக்கும் கும்பல்களால் நடத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் மற்றொரு குண்டையும் தூக்கிப் போட்டிருக்கின்றார்.

குற்றக் கும்பல்கள் தொடர்பான விசாரணைகள் பல பாதாள உலகக் கும்பல்களுக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தியுள்ளன என்று நாடாளுமன்றத்தில் அவர் அறிவித்திருக்கின்றார்.

அமைச்சர் விஜேபாலவின் கூற்றுப்படி, சமீபத்திய உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட பல வேட்பாளர்களுக்கும் பாதாள உலகக் குழுக்களுக்கும் இடையிலான தொடர்புகளை விசாரணைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பது வேட்பாளர்கள், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுவின்) எட்டு வேட்பாளர்கள், பொதுமக்கள் முன்னணியின் நான்கு வேட்பாளர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று வேட்பாளர்கள் மற்றும் சர்வஜன அதிகாரக் கட்சியின் ஒரு வேட்பாளர் ஆகியோர் அடங்குவர் என்று கூறப்பட்டது

சமீபத்திய கொலைகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாகவே இப்படிப் பதில் குற்றச்சாட்டை அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்திருக்கின்றார்.

ஊழல், மோசடி, முறைகேடுகள் போன்றவற்றை ஒழிப்போம் என்று கூறி ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த தேசிய மக்கள் சக்தி, இப்போது நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது வடக்கு, கிழக்கில் தனது வேட்பாளராக நிறுத்திய பலர் ஏற்கனவே ஊழல், மோசடி, முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தமிழ்த் தரப்புக்கள் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தி இருந்தன.

அது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எந்தப் பதிலையும் இன்னும் தரவில்லை. அது குறித்து நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்புகள் கேள்வி எழுப்பினால், அதற்கு பதிலாகவும், மற்றைய தமிழ்க் கட்சிகள் தரப்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டவர்களில் பலர் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறுவார்களோ, என்னவோ.....?

வடக்கில் எதிர்பாராத பின்னடைவைச் சந்தித்த ஆளும் தரப்பு, தமிழ்க் கட்சிகள் கசிப்பு விநியோகம் மற்றும் பணம் பட்டுவாடா மூலமே வாக்குகளைச் சேகரித்தன என்று அபவாதக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்திலேயே சுமத்தியிருந்தது.

அதுபோன்ற அபவாத குற்றச்சாட்டுதான் இப்போது எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் தொடர்பிருப்பதான ‘அளப்பும்’ போல..!

# மீண்டும் தமிழ்க் கூட்டமைப்பாகச் செயற்பட பங்காளிக் கட்சிகளுக்கு தமிழரசு அழைப்பு!

## கட்சிக்குள் தனி மனித தீர்மானம் இல்லை என்கிறார் சி.வீ.கே.



தமிழ் காங்கிரஸ் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகச் செயற்பட்ட கட்சிகளாக நாம் மீண்டும் செயற்பட கோரிக்கை விடுக்கிறோம் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள் ளார்.

தனி மனித தீர்மானம் எடுக்கும் கட்சியாக நாங்கள் இல்லை. தலைவர் என்ற முறையில் நான் இதந் தெளிவாகச் சொல்கிறேன். முன்பு அவ்வாறான நிலைமை இருந்திருக்கலாம். ஆனால் தற்போது அவ்வாறு இல்லை. ஆகக் குறைந்தது தலைவர், செயலாளராவது கலந்து பேசி எல்லா விடயங்களையும் இணைந்துதான் செயல்படுகிறோம். ஆகவே தனி மனித தீர்மானம் என்ற பேச்சு அபாண்டமானது என தமிழரசு கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு, கிழக்கு பெரும்பான்மையான சபைகளை கைப்பற்றி ஆளும் வகையில் முதல் நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இருக்கிறது. அவ்வாறு எமக்கு வாக்களித்து, எம்மை அங்கீகரித்து, ஏற்றுக் கொண்டு, ஊக்கமளித்த ஃ தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற – அனைவருக்கும், வடக்கு, கிழக்கு வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்துப் போட்டியிட்டு இல்லாதவற்றை மிகக் கேவலமாகச் சொல்லி தங்களின் மகிழ்ச்சியை கொண்டாடியவர்கள் இப்பொழுது நாங்கள் தேசிய மக்கள் கட்சியோடு டீல் பேசுகிறோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டு பேசுகிறார்கள். தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை மறுதலிக்கிறேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்தப் பரப்புரைகள் வேலை செய்யா என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர் நளிந்த ஜயதிஸ்ஸ கூட தம்மை தமிழ் கட்சிகள் அணுகவில்லை என்பதைக் கூறியிருக்கிறார்.

அடுத்த கட்ட செயற்பாடுகளை ஆராய்வதற்காக நாளைய தினம் (சனிக்கிழமை) அரசியல் குழு கூடுகின்றது. இவ்வாறான தேர்தல் விடயங்களை எந்தெந்த சபைகளில் எவ்வாறு செயல்படுவது, யார், யாரை முன்னிலைப்படுத்தி தவிசாளர், முதல்வரை தீர்மானிப்பதற்கு கலந்துரையாடவுள்ளோம்.

ரெலோ, புளோட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளருடன் பேசியுள்ளார்கள். செல்வம் அடைக்கலநாதன் தாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

காங்கிரஸ் உட்பட தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்பட்ட கட்சிகளாக நாம் மீண்டும் செயற்பட கோரிக்கை விடுக்கிறோம் – என்றார்.

# சொன்னதைச் செய்திருந்தால் பிமல் நாடாளுமன்றில் அழத்தேவையில்லை

## மொட்டுவின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் சாடல்



மதுபானசாலை அனுமதிப் பட்டியலை வெளியிட்டிருந்தால் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கசிப்பு விநியோகம் குறித்து நாடாளுமன்றத்தில் அழத்தேவையில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தலில் வெல்வதற்காகக் கசிப்பு விநியோகம் செய்துள்ளது எனும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கருத்துக் குறித்து பதிலளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பாக கீதநாத் காசிலிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

“அமைச்சர் பிமல் ரத்நாயக்க தற்போது நாடாளுமன்றச் சிறப்புரிமையின் பின்னால் ஒளிந்து கொண்டு, வாக்குகளை வெல்ல ‘தமிழ்க் கட்சிகள் கசிப்பு மற்றும் இலஞ்சம் வழங்குகின்றார்கள்’ எனக் குற்றம் சுமத்துகின்றார். ஆனால், இதே பிமல் ரத்நாயக்க சார்ந்த தேசிய மக்கள் சக்தி, கடந்த அரசின் கீழ் மதுபான அனுமதிகள் பெற்ற சில வடக்கு எம்.பிக்களின் பட்டியலை வெளியிடப் போவதாகத் தேர்தலுக்கு முன் வாக்களித்தது.

இப்போது, அந்தப் பட்டியலை வெளியிடுவதை அவர் சார்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியே தடுக்கின்றது.

அந்தப் பட்டியல் வெளியாகியிருந்தால், இன்று பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் அழ வேண்டிய நிலைக்கு வந்திருக்கமாட்டார். இன்னும் தாமதமாகிவிடவில்லை. நீங்கள் வாக்குறுதி செய்தபடி அந்தப் பட்டியலை வெளியிடுங்கள்.” – என்றார்.

# மாணவி அம்ஷிகா தொடர்பில் குற்றமிழைத்தோருக்கு அரசாங்கம் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்!

## சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கோரிக்கை

(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

மாணவி அம்ஷிகா தொடர்பில் அரசாங்கம் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, இழைக்கப்பட்ட அநீதிக்கு சமூக வலைதளங்களில் தீர்வை தேடத் தேவையில்லை என கூறுவது பொறுத்த மற்றது. இந்த கூற்றுக்கெதிராக நான் எனது கண்டனங்களை தெரிவிக்கிறேன் என சட்டத்தரணியும் சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளருமான அனுஷா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு கொட்டாஞ்சேனையில் கடந்த 29 ஆம் திகதி 16 வயதான, ஓர் இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் எம் அனைவரையும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

அந்த மாணவி ஒரு பிரபல மகளிர் பாடசாலையில் கல்வி கற்றுவந்த நிலையிலேயே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகினார் எனவும் அதனுடன் அந்த பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு தொடர்பு உள்ளதாகவும் அறியக்கிடைக்கிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த மாணவி பாடசாலைக்கு அறிவித்தும் கூட இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படாமல் மாணவி பாடசாலையை விட்டு இடைவிலகினார் எனவும் அறிய வந்துள்ளது.

இந்நிலையில் இந்தத் துயர சம்பவம் நிகழ்வதற்கு முன்னராக அந்த மாணவி அதிக மனவுளைச்சலுக்கு உள்ளாகியிருந்தமையும் தெரியவந்துள்ளது.

இந்தக் கொடூர சம்பவம் தொடர்பில் பெற்றோர்களுக்கு நீதி கிடைக்காத ஓர் அவல சூழ்நிலையிலேயே சமூக வலைத்தளங்கள் வாயிலாக இந்த விடயம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பின்னர்தான் அனைத்து தரப்பினரது கண்களும் திறந்து இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பில் மகளிர் அமைச்சரின் நாடாளுமன்ற உரையில் 'சமூக வலைத்தளங்களினால் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது' என்ற கூற்று எமக்கு வேதனையளிக்கிறது.

காரணம் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் நாசகார அரசாங்கத்தின் ஆட்சியையே தலைகீழாக மாற்றிய பெருமை இந்த சமூக வலைத் தளங்களுக்கு உண்டு என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என நினைக்கிறேன். இந்த அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக கூட இந்த சமூக வலைத்தளங்கள் அளப்பரிய பங்காற்றின என்பதை எவரும் மறுக்கவும் முடியாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கமாக, பொறுப்பு வாய்ந்த ஒரு மகளிர் விவகார அமைச்சராக, ஒரு பெண்ணாக இன்னுமோர் பெண்ணுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு எதிராக எழுப்பப்பட்டிருக்க வேண்டிய குரல் மகளிர் அமைச்சரது குரலாக இருந்திருக்க வேண்டும், ஆனால் அவரது கூற்று அது மக்களின் பக்கம் குற்றம் சாட்டும் முகமாக மாறியிருப்பது, பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை சட்டை செய்யாத, பதவியிலிருந்தும் தனது இயலாமையை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பது துரதிஷ்டவசமானது. பொதுமக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மீதான வெறுப்பை அதிகரிப்பதாக இந்தச் சம்பவம் அமைந்துவிட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவங்கள் நிகழவே கூடாது என்பதற்காக இந்த விகாரம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேணடும்.

அம்ஷிகாவுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காகவும், எம் சமூகத்தில் எதிர்காலத்தில் இவ்வாறான துயர சம்பவங்கள் நிகழாமல் இருக்க, என்னுடைய ஒத்துழைப்பு அனைத்து வழிகளிலும் இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

# மரண விசாரணை அதிகாரி நியமனம்

(ந.லோகதயாளன்)

மல்லாகம் நீதிமன்ற எல்லைப் பரப்பிற்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நமசிவாயம் பிறேம்குமார் நீதி அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தற்போதைய பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியான நமசிவாயம் பிறேம்குமாரே தற்போது மல்லாகம் நீதிமன்ற எல்லைப் பரப்பிற்குள் வரும் தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவை உள் ஈடக்கிய பகுதிக்கும் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நீதி அமைச்சின் செயலாளரினால் 24-04-2025 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.




# அ'புர விபத்தில் ஒருவர் படுகாயம்

(உடப்பு க.மகாதேவன்)

அநுராதபுரம் – பாலடிக்குளம சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை மோட்டார் ரக வாகனமும்,பவுஸரும் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளன. இதில் மோட்டார் வாகனம் பாரிய சேதத்துக் குள்ளாகியதுடன் அதன் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.








# கல்முனையில் மூன்று நாள்களுக்கு இறைச்சிக் கடைகளுக்குப் பூட்டு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தேசிய வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாளை மறுதினம் திங்கட்கிழமை 12 ஆம் திகதி முதல் புதன்கிழமை 14 ஆம் திகதி வரையான மூன்று நாழ்களும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் யாவும் மூடப்படும் என மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி அறிவித்துள்ளார்.



இம்மூன்று நாட்களும் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட விலங்கறுமனையும் மூடப்பட்டிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் விடுத்துள்ளார்.

மேலும், தனிப்பட்ட இடங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி உள்ளிட்ட விலங்குகளை அறுக்க வேண்டாம் எனவும், அனைத்து இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களும் பொது மக்களும் இவ்வறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுமாறும் ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி கேட்டுக் கொண்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

16



மாணிக்கதாசன்



உபதிஸ்ஸ கமநாயக்கா

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**1987** பரிமாணத்தில் ஜே.வி.பியின் கொள்கைகள் புரிபடாதனவாகவும், அவர்களது வசதிக்கேற்றபடியும் இருந்தன. அவர்கள் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைக்கு எதிரானவர்கள் என்பதைத் தவிர, இந்தியாவின் ஆளும் வர்க்க அரசுடன், இனரீதியில் ஆதரவு தர இராஜதந்திர முன்னெடுப்பு செய்தமை, இப்பொழுது முற்றும் முழுவதும் இந்தியாவுக்கு எதிராகத் திரும்பி, அவர்களை வன்ம விரோதியாகப் பார்த்து, இந்திய ஏகாதிபத்தியத்தில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதாகப் புறப்பட்டது. அமெரிக்க - இந்திய அரசுகளின் முதலாளித்துவமே நாட்டை கொள்ளையிடுகிறது என்று பிரசாரப்படுத்தி, அமெரிக்க முதலாளித்துவத்துக்கு எதிராக அவர்கள் இந்தியப் பிராந்தியத்தில் காலூன்ற விடாமல் இந்தியாவுக்கு ஆதரவு தருவோம் என்பன போன்ற நிலைப்பாடுகள் பழம் கதையாகின. காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்றபடி தங்களுக்குத் தோன்றியவை எல்லாவற்றையும் அறிக்கைகளாக வடித்தார்கள். ஆனாலும் தமிழ் மக்களுக்கு இணைந்த மாகாண உரிமைகள் வழங்குவதை எதிர்த்து, அதில் அரசியல் செய்து, அரசை வீழ்த்த வன்முறையை கையில் எடுத்தவர்கள், தங்களைப் பேரினவாதிகள் என்று அடையாளப்படுத்தாது, கவனித்து, மேலாதிக்கவாதிகளாகவே தோற்றப்படுத்தினர். 'தமிழ் மக்களும்', 'ஈழக் கோரிக்கைக்காரர்களும்' எனப் பிரிவு படுத்தப்பட்டு, ஈழக் கோரிக்கைகாரர்கள் இந்தியாவுடன் விரட்டி அடிக்கப்பட வேண்டும் என்ற

தொடர்ச்சி▼



அமிர்தலிங்கம்



குமார் குணரத்தினம்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

அறிக்கைகள் வெளிவந்தன.

போஸ்டர்கள் அடிப்பதிலும் மதில்களில் வாசகங்கள் எழுதுவதிலும் கைதேர்ந்தவர்கள் ஜே.வி.பியினர். பட்டி தொட்டி எல்லாம் எங்கே ஒரு வெற்றிடம் இருந்ததோ அங்கெல்லாம் கவர்ச்சிகரமான சிறிய வாக்கியங்களில் 'தேசபக்தியுள்ள சகோதரர்களும் இராணுவத்தினரும் ஈழக் கோரிக்கைகாரர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும்' என்ற செய்திகள் ஒட்டப்பட்டன. மேலும் 'இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாகாண முறையிலான அதிகாரப் பரவல் முதலாளித்துவ ஜெவர்த்தனா - தொண்டமான் இருவரும் அந்த முதலாளி வர்க்கத்தின் தமிழ்ப் பிரதிநிதிகளை அச்சுறுத்திப் பணிய வைத்து தமிழ் மக்களின் மேல் திணிக்கப்பட்டது' என மக்களைக் கவரும் பிரசாரங்கள் வெளிவந்தன. அது மாத்திரமில்லாமல் 1977-இல் அமிர்தலிங்கத்துக்கும் ஜெயவர்தனாவுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் இருந்ததாகவும், அதன் மூலம் இராணுவத்திடமிருந்து வடக்கின் 'கடலோரப் பாதுகாப்பு அணி' செயலிழக்கப்பட்டு, அதனால் தமிழ் விடுதலைக் குழுக்கள் இந்தியாவில் பயிற்சி பெற வசதிகள் ஆக்கப்பட்டன எனவும், அந்த உதவிகளே இராணுவத்திற்கு எதிராகப் பல வெற்றிகளைப் பெற விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்புத் தருகின்றன எனவும் பிரசாரங்கள் கிளம்பின.

இப்படியான கதைகளை எல்லாம் வடித்த ஜே.வி.பியின் மற்றைய தலைவர்கள் 'தமிழீழக் கோரிக்கைக்கான தீர்வுகள்' என விஜயவீர எழுதிய புத்தகத்தில் தமிழர்களது குறைபாடுகள், மனக்குறைகள், மனத்தாங்கல்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை என குறித்தவை பற்றி பேசவில்லை. அந்தக் குறைகளுக்கும் மனத்தாங்கல்களுக்கும் இந்தியா தீர்வை ஜே.ஆருடன் இணைந்து முன்னெடுத்தாலும், அதற்கான இணக்கத்தைத் தாங்கள் சிங்கள மக்களின் பிரதிநிதிகளாகத் தரவில்லை என்ற பேரினவாத மேலாதிக்கக் குழப்பங்களில் கருத்துக்கள் இருந்தன.

1977 இல் லயனல் போபகே போன்றோர் தமிழ் விடுதலைக் குழுக்களில் காணக்கூடிய முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர்களுடன் தொடர்புகளைப் பேணக் கேட்டபோது அவற்றை நிராகரித்தவர்கள், இப்போது அவர்களை அணுகி இந்தியப் படைகளைத் தாக்கவும், தங்களது போராட்டங்களுக்கு அவற்றை நகர்த்துவதற்கு வழிமுறைகளும் ஆயுதப் பயிற்சிகளும் தேடினர். இந்தத் தொடர்புகளை அவர்களின் பிரதேச செயலாளர் ரஞ்சிதம் பிரேமகுமாரின் சகோதரர் ரஞ்சிதம் குணரத்தினத்தின் மூலமாக ஏற்படுத்தினர். அதே சமயம் புளொட் இயக்கத்தின் ஆயுதக் குழுக்களின் தலைவர் மாணிக்கதாசனும் ஜே.வி.பியின் முக்கிய தலைவர் உபதிஸ்ஸ கமநாயக்காவும் ஒன்று விட்ட சகோதரர்கள். அவர்கள் மூலம் புளொட்டின் ஆயுத தளபாடங்களின் கைமாற்றங்களும் பயிற்சிகளும் ஜே.வி.பிக்குக் கிடைத்தன. அறகலய போராட்டத்தில் இந்த குணரத்தினம் முன்னணி சோஷலிச கட்சி (Frontline Socialist) சார்பில் பங்கெடுத்து, பின்னர் அறகலயப் போராட்டம் கலைக்கப்பட்டதும், தமிழ் மக்களிடையே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிகளுக்காக பல கூட்டங்களை நடத்தியது. இன்று அவர்களது கட்சி அரசுக்கு ஆதரவாக செயல்படுவதில்லை. மோடியின்வருகையின்போதுகையெழுத்திடப்படவிருந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவிருந்த இவர்களுக்கு எதிராகப் பொலிஸார் முன்கூட்டியே தடையுத்தரவுகளைப் பெற்றிருந்தார்கள்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை, நாட்டை விற்பதற்காக, சிங்கள பௌத்த மக்களை தெருவில் விட, முதலாளி வர்க்கத்தின் ஜே.ஆர்., தொண்டமான், ஈழக் கோரிக்கையாளர்கள் யாவரும் இணைந்தே செயல்படுகின்றார்கள் என்ற அவர்களது வாதங்களுக்காக, ஜே.ஆர்., ஈழக் கோரிக்கையாளர்களை வெளிநாட்டுத் தூதுவர்களாக, ஈழத்தை பிரசாதப்படுத்த வசதியாக அனுப்புகிறார், தமிழீழத்தை ஆதரிக்கும் ஏ.ஜே.வில்ஸனையும், சத்தியேந்திராவையும் ஆலோசகர்களாக நியமித்துள்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ளார், தமிழீழப் பயங்கரவாதக் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினால்தான் உருவாக்கப்பட்டன என்பது சன்சோனி ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப் பட்டு, அதனை உமாமகேஸ்வரன் பொதுவெளிகளில் தெரிவிப்பதிலும், அவர்களை (தமிழர் விடுதலைக் கூட்டணியை) தடை செய்யாமல் ஜே.வி.பியைத் தடை செய்வதாலும், அமிர்தலிங்கத்துக்கு முன்னர் இல்லாதவாறு எதிர்க்கட்சித் தலைவராக இராஜதந்திர பாஸ்போர்ட் தரப்பட்டு, அவர் இலகுவாக வெளிநாடு களில் ஈழத்துக்காகப் பிரசாரம் செய்வது, அமிர்தலிங் கத்தின் உத்தரவின் பேரில் தமிழ் ஈழப் பயங்கரவாதிகள் இராணுவத்தையும் பொலிஸாரையும் கொல்லும்போது அதே இராணுவத்தாலும் பொலிஸாலும் அவருக்குப் பாதுகாப்பு வழங்குவது, அவரது மந்திரி சபையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலை வர்களான தொண்டமான், இராஜதுரை, தேவநாயகம் போன்றோரை சேர்த்திருப்பது - போன்ற மக்களை ஈர்க்கக் கூடிய செய்திகளை ஜே.வி.பினர் தந்து கொண்டி ருந்தனர்.

இப்படியான செய்திகளில் இருந்த உண்மைத் தன்மைகள் வேறானாலும், நாட்டின் ஒரு பகுதியில் தமிழருக்கு முன்னுரிமையும் சுயாட்சியும் தர முயல் வதும், அதற்கு இந்தியா துணை நிற்பதுவும் ஏற்றுக் கொள்ளப்படாதவை என எழுந்த எதிர்ப்புகள் வன்மை யாகவும், முரட்டுத்தனமாகவும், பயங்கரமாகவும் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஒருவர் தன்னைப் பாது காத்துக் கொள்ளத் தேவையான முரட்டுத்தனத்தையோ, பலாத்காரத்தையோ, வன்முறையையோ பாவிப்பது விளங்கிக் கொள்ளக் கூடியது. ஆனாலும் ஆக்கிரமிப்பு இல்லாத, அன்பு, காருண்யம், சாத்வீகமென பௌத்தம் தந்த நெறிகளில் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள் என பொதுவாகக் கருதப்பட்ட அந்த சாத்வீகப் போர்வைக்குள் கட்டுப்படுத்த முடியாத முரட்டுத்தனமும், வன்மமும், வெறியும் அவர்களிடம் இருக்கின்றன என்பது இந்தக் கட்டங்களிலும் வெளிவந்தது.

ஜே.வி.பியினர் நடத்திய வன்முறைகள் எல்லாவற் றையும் தாங்கள் சிங்கள - பௌத்தத்தைக் காப்பாற்றவே நடத்தினோம், அதற்காக தங்களையே அழிக்க முயன்ற அரசின் கையாள்களை அவர்கள் பொலிஸோ, இராணு வமோ, அரசு அதிகாரிகளோ, அவர்களை அழித்தோம் என நியாயப்படுத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், தொண்டமானும் தமிழீழக் கோரிக்கையாளர்களும் இவை எல்லா வற்றையும் சேர்ந்துதான் நடத்துகிறார்கள் என்ற பிரசாரங்களை ஜே.வி.பியினரது விசுவாசிகளைத் தவிர பெரும்பாலானவர்கள் நம்பவில்லை. அவற்றை நம்பி அவர்களுக்கு - அவர்களது கொள்கைகளுக்கு - ஆதரவு தரவில்லை. ஆனால் மாகாண சபைகளுக்கு எதிரான மற்றைய அரசியல் கட்சிகளும் குழுமங்களும் தமிழருக்கு சுயாட்சி தருவதற்கு ஆதரவு தராதமையால் ஜே.வி.பியின்போராட்டம் நீதியானதான தோற்றம் பெற்றது.

இந்த ஆதரவுகளை இணைத்து, பின்னர் காணாம லாகிய ஆறு சாட்சிகளின் முன்னணி ஒன்று நவம்பர் 1988 இல் விவரப்படுத்திய தீர்மானத்தில், 'நாட்டில் உள்ள எல்லா இன மக்களுக்கும் சம உரிமை ஏற்றுக் கொள்ளப்படும், இதேபோல் எல்லா மொழிகளும் சமத்துவமானவை என ஏற்கப்படும், நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் காணிகளில் எவருக்கும் முன்னுரிமை கிடையாது, அது அனுமதிக்கப்பட மாட்டாது, தங்கள் தங்கள் மொழிகளிலேயே அரசுடன் தொடர்பு கொள்வது ஏற்றுக்கொள்ளப்படும், எல்லா இன மக்களின் பாரம்பரியங்களும் பாதுகாக்கப்படும்' என விவரித் தார்கள்.

இந்தத் தீர்மானத்திலும், இனப்பிரச்சினை என்பது உண்டென ஏற்றும், பிரிவினையை எதிர்க்கிறோம் என்ற கோஷத்தில் தமிழ் மக்களுடைய கோரிக்கைகள், அபிலாசைகள் எல்லாவற்றையும் எதிர்த்து, அதன் அடிப்படையில் அரசைக் கைப்பற்ற வேண்டும் என்று தோழர்கள், இராணுவம், மற்றைய படை அமைப்புகள் யாவற்றையுமே அரசாங்கத்தைக் கவிழ்க்க ஆதரவு தர அறிவுறுத்தல் தரப்பட்டது. பிரிவினையைத் தமி ழர்கள் தடுக்க வேண்டுமானால், தங்களது அரசாங்கம் பதவியில் இருக்க வேண்டும் என்பது கோரிக்கையானது. இந்தக் காலகட்டங்களில் ஜே.வி.பி. கலாநிதி விமலாநந்த போன்ற புத்திஜீவிகளுக்கும், அமரதேவா, நந்தா மாலினி போன்ற கலைஞர்களுக்கும், 'ஜாதிக சிந்தனய'வின் சிற்பி குணதாஸ அமரசேகரா, வைத்தியர் நளின் சில்வா போன்றவர்களுக்கும் முக்கியத்துவமும் பிரபல்யமும் கொடுத்தது. 'ஜாதிக சிந்தனய' என்ற குழுமம் சிங்கள புத்திஜீவிகளால் ஜே.ஆரது திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் காலம் காலமாக ஊறியிருந்த வர்க்கப் பொறிமுறைகள் அழிக்கப்பட்டு, கலாசாரமும் சீரழிய கூடும் என்பதால் இவற்றை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு காரி யங்கள் ஆற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தியது. அதில் அங்கம் வகித்தவர்கள் 1971 இன் பின், பின்தங்கிய கிராமங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு வேலைகளுக்காகக் குடி பெயர்ந்து அங்கேயே தங்கி விட்டவர்கள். கிராமத்தையும் நகர்ப்புறங்களையும் சுட்டிக்காட்டி, நாட்டின் ஜீவன் இந்தப் போக்குகளினால் - முக்கியமாக ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் - சீரழிந்து விடும் என எதிர்ப்பு தெரிவித்து, ஜே.வி.பியுடன் அவர்களது பொருளாதாரக் கொள்கைகளுக்காகக் கை கோர்த்தவர்கள்.

ஜே.வி.பியின் 1971 ஆம் ஆண்டு எழுச்சியில் பல கிராமப்புற இளைஞர்களில் பலர் கலைப்பீட மாண வர்களும் பட்டதாரிகளும் இருந்தார்கள். ஆனால் அவர்களது 1986 - 1989 எழுச்சியில் பல பிரபல தொழில் வல்லுநர்களும், பெயர் பெற்ற கலாசாலை மாண வர்களும், விரிவுரையாளர்களும் ஆதரவு தந்தமை அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் உயர் மட்டங்களில் இருந்த அதிருப்தியையும் விரிசலையும் காட்டியது.

'ஜாதிக சிந்தனய'வின் தத்துவங்களில் அவர்கள் தனிப்பட்ட காணி உரிமைகளை ஆதரிக்கவில்லை. பொதுநல பொருளாதாரம் தனியார் காணிகளில் வளர முடியாது என்பது அவர்கள் வாதம். அதேபோல கிராமத்து இளைஞர்களிலேயே ஜே.வி.பி. தங்களது புரட்சிக்கு நம்பி இருந்தது. குணதாஸ அமரசேகரவின் சிந்தனைகளில் புரட்சி அங்கிருந்துதான் புறப்பட வேண்டும். அது, சிங்கள - பௌத்த மக்களால்தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பவர் அவர்.

ஆரஞ்சு பழ மூட்டைகள், தேசிக்காய் பழ மூட்டைகள் இரண்டையும் இரண்டு கைகளில் கொண்டு கரையேற்ற முயல வேண்டாம், முதலில் ஒன்றைக் கைவிடு, எது முக்கியமோ அதனோடு கரையேறு என்பது தமிழரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், முதலாவது சிங்கள - பௌத்ததை காப்பாற்றி கரை ஏற்றுங்கள் என்பது குணதாஸ அமரசேகரவின் விளக்கம்.

(தொடரும்)

# 36 இடங்களை குறிவைத்த பாகிஸ்தான்; 300 ட்ரோன்களை வீழ்த்தியது இந்தியா

## கேர்னல் சோபியா குரேஷி விவரிப்பு



இந்தியாவுக்குள் 36 இடங்களை குறிவைத்து தாக்குவதற்காக பாகிஸ்தான் செலுத்திய 300 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை இந்திய இராணுவம் வெற்றிகரமாக அழித்ததாக கர்னல் சோபியா குரேஷி விவரித்துள்ளார்.

'ஒபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்குப் பிந்தைய பாகிஸ்தான் இராணுவத்தின் வான்வழித் தாக்குதல் முயற்சிகளை இந்தியா முறியடித்தது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு டில்லியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் பங்கேற்று கடந்த 7 ஆம் திகதி பயங்கரவாதிகள் முகாம் மீது இந்தியா நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்தும், அதற்கு இந்திய இராணுவம் அளித்து வரும் பதிலடி குறித்தும் விளக்கம் அளித்தனர்.

இதுதொடர்பில் கர்னல் சோபியா குரேஷி கூறும்போது,

"மே 7 மற்றும் 8 ஆம் திகதி ரவு, இந்திய ராணுவ உள்கட்டமைப்பை குறிவைக்கும் நோக்கில், மேற்கு எல்லை முழுவதும் இந்திய வான் வெளியை பல முறை அத்துமீறி பாகிஸ்தான் இராணுவம் தாக்கியது. இது மட்டுமலலாமல், கட்டுப்பாட்டுக் கோட்டில் கனரக ஆயுதங்களையும் பாகிஸ்தான் ராணுவம் ஏவியது. 36 இடங்களை தாக்க முயற்சிப்பதற்காக சுமார் 300 முதல் 400 ட்ரோன்களை பாகிஸ்தான் இராணுவம் பயன்படுத்தியது. இந்திய ஆயுதப் படைகள் இயக்கவியல் மற்றும் இயக்கவியல் அல்லாத வழி முறைகளைப் பயன்படுத்தி இந்த ட்ரோன்களில் பலவற்றை சுட்டு வீழ்த்தின.

இந்தியாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளைச் சோதிக்கும் நோக்கிலும், உளவுத் தகவல்களை சேகரிக்கும் நோக்கிலும் பாகிஸ்தான் இத்தகைய பெரிய அளவிலான வான்வழி ஊடுருவல் முயற்சிகளை மேற்கொண்டுளளது. பாகிஸ்தான் பயன்படுத்திய ட்ரோன்களின் உடைந்த பாகங்கள் குறித்து தடயவியல் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப அறிக்கைகளின்படி, அவை துருக்கி நாட்டின் அசிஸ்கார்டு சோங்கர் ட்ரோன்கள் என்பது தெரிய வந்துள்ளது" என தெரிவித்தார்.

விங் கொமாண்டர் வியோமிகா சிங் கூறுகையில்,

"பாகிஸ்தானின் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக, பாகிஸ்தானில் உள்ள நான்கு வான் பாதுகாப்பு தளங்கள் மீது ஆயுதமேந்திய ட்ரோன்கள் ஏவப்பட்டன. அவற்றில் ஒன்று பாகிஸ்தானின் ஏடி ரேடாரை அழித்தது. கனரக பீரங்கி துப்பாக்கிகள் மற்றும் ஆயுதமேந்திய ட்ரோன்களைப் பயன்படுத்தி கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி பீரங்கித் தாக்குதலை பாகிஸ்தான் நடத்தியது. இதன் விளைவாக இந்திய ராணுவ வீரர்களுக்கு சில இழப்புகள் மற்றும் காயங்கள் ஏற்பட்டன. இந்திய பதிலடித் தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவமும் பெரும் இழப்புகளைச் சந்தித்தது.

மே 7 ஆம் திகதி இரவு 08:30 மணிக்கு ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை நடத்திய போதிலும், பாகிஸ்தான் அதன் சிவில் வான் வெளியை மூடவில்லை. இந்தியா மீதான அதன் தாக்குதல் விரைவான வான் பாதுகாப்பு பதிலடியைத் தரும் என்பதை முழுமையாக அறிந்த பாகிஸ்தான் சிவில் விமானத்தை கேடயமாகப் பயன்படுத்துகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சர்வதேச எல்லை அருகே பறந்து கொண்டிருந்த சர்வதேச விமானங்கள் உட்பட சந்தேகத்துக்கு இடமில்லாத சிவில் விமானங்களுக்கு இது பாதுகாப்பானது அல்ல. எங்கள் அறிவிக்கப்பட்ட மூடல் காரணமாக இந்தியப் பக்கத்தில் உள்ள வான்வெளி சிவில் விமானப் போக்குவரத்திலிருந்து முற்றிலும் விலகி உள்ளது. இருப்பினும், கராச்சி மற்றும் லாகூர் இடையே விமானப் பாதையில் பறக்கும் சிவில் விமான நிறுவனங்கள் உள்ளன. இந்திய விமானப்படை தனது பதிலடியில் கணிசமான நிதானத்தைக் காட்டியது. இதனால் சர்வதேச சிவில் விமானங்களின் பாதுகாப்பை உறுதி செய்தது." என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறுகையில்,

"இந்திய நகரங்கள் மற்றும் மக்கள் வாழும் பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் வியாழக்கிழமை இரவு ஆத்திரமூட்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியது. இந்திய ஆயுதப் படைகள் பொறுப்புடன் பதிலடி தந்தன. பாகிஸ்தான் நடத்திய இந்தத் தாக்குதல்களை அதிகாரப்பூர்வமாகவும், வெளிப்படையாகவும் மறுப்பது, அவர்களின் இரட்டை நிலைப்பாட்டையும், அவர்கள் ஆழமாக செல்ல விரும்புவதையும் காட்டுகிறது.

அமிர்தசரஸ் போன்ற நகரங்களை இந்திய இராணுவம்தான் குறிவைத்தது என பாகிஸ்தான் கூறுகிறது. தனது செயல்களுக்கு பொறுப்பேற்பதற்கு பதிலாக இவ்வாறு அபத்தமான மற்றும் மூர்க்கத்தனமான கூற்றுக்களை பாகிஸ்தான் செய்தது. அவர்களின் வரலாறு அப்படிப்பட்டது. ட்ரோன் தாக்குதல் மூலம் நான்காமா சாஹிப் குருத்வாராவை இந்தியா குறிவைத்ததாக பாகிஸ்தான் தவறான தகவலைப் பரப்பியது. இது மற்றொரு அப்பட்டமான பொய். வகுப்புவாத மோதலை உருவாக்கும் நோக்கத்துடன் இத்தகைய வகுப்புவாத சாயலை சேர்க்க பாகிஸ்தான் தீவிரமாக முயற்சிக்கிறது" என்று குற்றம் சாட்டினார்.

# டில்லி விமான நிலையத்தில் 228 விமானங்கள் இரத்து



டில்லி விமான நிலையத்தில் சேவையில் ஈடுபடவிருந்த 288 விமானங்கள், கடந்த இரண்டு நாள்களில் இரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான பதற்றநிலையை தொடர்ந்து இவ்வாறு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே ஸ்ரீநகர், ஜம்மு, அமிர்தசரஸ், லே, சண்டிகர், பிகானீர், ஜோத்பூர், கிஷன்கர் மற்றும் ராஜ்கோட்டிற்கு செல்லும் அனைத்து விமானங்களையும் இன்று நள்ளிரவு வரை நிறுத்தி வைப்பதாக இந்தியாவின் இண்டிகோ நிறுவனம் அறிவித்துள்ளது.





# பாகிஸ்தானின் தாக்குதலை முறியடித்தது இந்தியா!

## ராஜஸ்தான் மாநிலத்தில் அவசர நிலை

இந்தியாவின் ராஜஸ்தானிலுள்ள விமானப்படை தளங்களை இலக்கு வைத்து பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்த முற்பட்டதாகவும் அதனை இந்திய இராணுவம் முறியடித்ததாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனை தொடர்ந்து ராஜஸ்தான் மாநிலத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் முதலமைச்சர் பஜன் லால் சர்மா தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அனைவரையும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவிறுத்தப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றவும் இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத், லாகூர், கராச்சி, சியால்கோட் உள்ளிட்ட நகரங்கள் மீது இந்திய இராணுவத்தால் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதலில் பாகிஸ்தானிலுள்ள இராணுவ தளங்கள், விமானப்படை தளங்கள் பாரிய அளவில் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் நேற்று இரவு மீண்டும் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானின் 3 போர் விமானங்கள் இந்தியாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானத்திலிருந்து விமானி வெளியேறி தப்பிச்செல்ல முற்பட்டபோது இந்திய பாதுகாப்பு படையினர் அவரை கைது செய்ததாகவும் இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

முன்னெச்சரிக்கையாக பஞ்சாப் மாநிலத்திலுள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு 3 நாள்கள் விடுமுறை வழங்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# பாகிஸ்தான் தாக்குதல் நடத்தலாம்; சண்டிகர் மக்களுக்கு எச்சரிக்கை

இந்தியாவின் சண்டிகர் நகரில் பாகிஸ்தானினால் வான்வழி தாக்குதல் நடத்தப்படலாம் என அப்பகுதி பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சண்டிகரிலுள்ள விமானப்படை தளத்தினால் வழங்கப்பட்ட எச்சரிக்கையை தொடர்ந்து சைரன் ஒலி எழுப்பப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக பொதுமக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறும் வீட்டின் மாடிகளின் முகப்புப் பகுதிகளுக்கு வருவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.05.2025




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்துக்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள். இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.05.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்ட மிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும்.இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# தேசிய வெசாக் வாரம் இன்று முதல் ஆரம்பம்

'நல்ல குணங்களைக் கொண்ட உன்னத மக்களுடன் பழகுவோம்' எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு தேசிய வெசாக் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒரு வார கால வெசாக் வாரம் பிரகடனப்படுத்தப்படவுள் ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நுவரெலியா பௌத்த நிலைய விகா ரையில் இன்று மாலை நடைபெற வுள்ளது.

வெசாக் வாரத்தில் 3 நாள்களுக்கு நாடளாவிய ரீதியிலுள்ள இறைச்சி, மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.

நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் பண்டிகை மற்றும் அனுராத புரத்திற்கு செல்லும் பக்தர்களுக்காக நேற்று முதல் விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

எதிர்வரும் 13ஆம் திகதி வரை இந்த விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்பட வுள்ளது.